Registered at the G. P. O. AS A NEWSPAPER

# ஸந்மார்க்கபோதினி

பத்திரிகைவிலைவிகிதம்
வருஷத்துக்கு ரூபா உ-௦ ௰
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௬௰
இந்தியாவுக்குசதம் ௬௰
பிறதேசங்களுக்கு ௬௰

SANMARKA POTHINI

விளம்பரவிலைவிகிதம்
வரி ஒன்றுக்குசதம் ௧௦
௧௦ க்குமேல்ஒருவரிக்கு ௫
௧௦ க்குமேல்.......... அ
இணைப்பிரசா மொவ்வொன்றிற்கும்3-ல் ஒன்று

ஒன்றுவிட்டோரு புதன்கிழமைகளிற் பிரசுரஞ்செய்யப்படும்.

சாதுசங்கஞ் சன்மார்க்கசாதனம்

Published on every other Wednesday

VOL. XXXV. JAFFNA - APRLY 2nd 1919. No. 7

௩௰௫ம் புத்தகம். யாழ்ப்பாணம் ௧௯௧௯ம் ௵ சித்திரைமீ உ௨ புதன்கிழமை சங்கியை எ

## மதுபானக்குத்தகை.

சென்றமீ 19ம் 20ம் 21ம் திகதிகளில் யாழ்ப்பாணக் கள்ளுத்தவறணைகளின் வருடக் குத்தகை மிக ஏற்றமான விலைக்கு விற்கப்பட்டன. நம்மூரில் ஒருதவறணையில்மாத்திரம் 1100 ரூபா ஏற்றமாம். அடுத்த தவறணையும் அப்படியே ஏற்றம் பெற்றது. இவ்வேற்றம் குடிகாரரின் அதிகரிப்பையும் நமதூர்ப்பணம் மோசம்போவதையுங் காட்டுகிறதல்லவா? சனக்குறைவுள்ள நம்மூருக்கு இரண்டுதவறணை என்னென்று முன்னுங்கேட்டிருக்கிறோம். இத்தொகைக்கு அரசாட்சியார் வேறுவரியை ஸ்தாபித்தாயினும் இக்குடிகேட்டை நீக்கிவிடக்கூடாதா? இதனாலல்லவா கோட்டில் வழக்குகள் மலிகிறது! குடும்பத்தில் சச்சரவுண்டாகின்றது! ஊரில்கலகமுண்டாகிறது! துராகிருதச்செய்கை பரவுகிறது! இந்த புத்தகத்தினைவின்னாவது அரசாட்சியார் கவனிப்பாரென்றிருந்தோம். இதன் தீமையை டக்றர்மார் ஞானவிபுணர் யாவருமுணர்ந்திருக்கும் இக்காலத்திலாவது இதற்கோர்முடிவு செய்யவேண்டாமா? விசேஷ [illegible] அபினில் கடுந்தண்டம்விதித்துச் சிலரைக் கெடுக்கலிருந்த அரசினர் இதன் தீமையை இனியாவது கவனிப்பாரென நம்புகிறோம். இதைக் குறைத்தற்காக நமக்கோருகுளிர்ச்சியானசெய்தி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வூருக்குத் தேவையில்லையென்று வரிப்பணமிறுப்போரில் 100க்கு 75 விதமானோர் ஏசன்றார்முன்தோன்றிச் சொன்னால அவ்விடத்துள்ள தவறணை எடுக்கப்படுமாம். 100க்கு 50 பேர் குடிகாரரும் 50 பேர் திடிகாரருமாயிருக்கையில் இதைக் கவனிப்பதார்? எல்லாப் பொருட்களும் விலையேறிய தற்காலத்தில் தம்வேலையைவிட்டுச் சம்மதிசொல்லப் போவாரோ? அவன் கெட்டால் நமக்கென்ன? நான் அந்த அலுவலைத்திரித்தால் வயிற்றுக்கென்ன? என்பாரும் கள்ளினால லாபமடைவாரும் மஸ்துப்பிரியரும் ஒருபக்கமாயின்றால் 100க்கு 75 பேர் பிரியமில்லையென்று சொல்ல வருவதெப்படி? ஆனால் அதிலொரு சந்தேகமிருக்கிறது. சம்மதிசொல்லுந்தினத்தில் வந்தவருள் முக்கால்வாசிப்பேரின் சம்மதிப்படி தீர்க்கிறதா? அல்லது வரிப்பணமிறுப்பவரில் முக்கால்வாசிப்பேர் கட்டாயமாய் வரவேண்டுமாவென்பது தெரியவில்லை. முந்தியபடியானால் அது கூடுமுண்டு. அல்லது அவர் கையொப்பத்தைவாங்கினால் போதும்,, அல்லது ஒருதலைமைக்காரன்முன்சொன்னாற்போதுமென்றிருந்தால் அல்லது 100க்கு 50 பேர் சம்மதிசொல்லவேண்டுமென்ற பிரமாணமிருந்தால் ஒருவாறு நன்மையுண்டாகும். விருப்பிருந்தால் எப்படியுஞ்செய்யலாம். இல்லையேல் ஒன்றும் நடவாது. ஆதலால் இவைகளைக்குறித்து நமது கௌரவ பிரதிநிதிகள்சிந்தித்துப் பலனில்லாவிடினும் காரியசித்தியாகும்வரையில் அருட்டிக்கொண்டே வரவேண்டுமென்று அவர்களைப் பரிந்துகேட்கிறோம்.

## பிறர்க்கிடுபள்ளந்தான்விழுபள்ளம்.

சேர்மனியின் செய்கையைக் குறித்து "சர்வவியாபி"யில் "M. P. R." கூறியவைகளைச்சுருக்கி இதன்கீழ்த் தருகிறோம்.

அக்கிரமத்தியஞ்செய்த சேர்மனி பிறர்க்குச்செய்ததீமையைத் தான் அனுபவிக்கிறதாயினும் அதன் கஷ்டங்களைக்குறித்து வாசிக்கையில் பரிதாபம் மனத்திலுண்டாகிறது. உணவுப்பொருட்கள் கிடைப்பதரிதாயின. ஸ்பார்ட்டக்கஸ்கட்சியார் சொல்லொணா அக்கிரமங்களைப் புரிகின்றனர். அரசாட்சி பலவீனமாயிருக்கிறது. தேசத்தில் ஒழுங்கில்லை. சக்கிரவர்த்தியும் புத்திரரும் சென்மதேசத்தைவிட்டோடி ஆளுக்கொருபக்கமாய்த் திரிகிறார்கள். மற்றச் சிற்றரசர் தம் சிம்மாசனத்தையிழந்து சிதறிக்கிடக்கிறார்கள், துட்டர்கள் தம்மிஷ்டப்படி துராகிருதஞ்செய்கின்றனர். ஒல்டேன்பேர்க் பிரியஸ்லண்டு மாகாணங்களில் கப்பல்வேலைசெய்துகொண்டிருந்த குப்னர் என்பவன் சென்ற நாலுமாசங்களாய்ச் சர்வாதிகாரஞ் செலுத்திக்கொண்டிருந்தான். கூலியாளரும் தொழிலாளரும் கட்டுப்பாடாய் வேலைநிறுத்திவிட்டனர். ஸ்பார்ட்டக்கஸ் கட்சியார் வேலைக்காரரைப் பயமுறுத்தி வேலைசெய்யாதபடி தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஸ்பார்ட்டக்ஸ் கட்சியார்மிகு வல்லமைகொண்டு பெரிய அக்கிரமங்களைச்செய்துகொண்டிருக்கின்றனர். அக்கட்சியின பெயரை நமது பத்திராபிமானிகளில் அனேகருக்குத் தெரியாமையால் அப்பதத்திற்கு அர்த்தமேதென்று முந்தக் கூறவேண்டியிருக்கிறது.

ரோமையர் காலத்தில் அன்ரோக்கிளஸ் என்ற ஓரடிமை தன் எசமானிடத்திலிருந்து காட்டுக்கு ஓடிப்போனபோது அக்காட்டில காலில் முள்தைத்திருந்த ஒருசிங்கத்தின் காலின் உபாதியை நீக்கினதின்பொருட்டு அவனுக்கு ஆகாரமளித்துவந்ததென்றும் சிலகாலத்தின்பின் அவ்வடிமை துரைத்தனத்தார் கைப்பட்டு அவனைச் சிங்கக்கெபியிற்போட்டு ஓர்சிங்கத்தைக் கூட்டிலிருந்துதிறந்துவிடப்படவே அதுவேகாட்டில்நேசமுற்றிருந்தசிங்கமாதலால் அதுபயங்கரத்துடன்கெர்ச்சித்துக்கொண்டுவந்துஅவனைக்கண்டவுடன்நாய்க்குட்டிபோற் சாதுவாகி அவன் கைகளைநக்கிக்கொண்டிருந்ததென்றும் அதனால் அரசாங்கத்தார் சங்கதியையறிந்து அவனைவிடுதலைசெய்து அச்சிங்கத்தையும் அவனுக்கு உபகாரமாய்க் கொடுத்தார்களென்றும் ஓர்கதை வாசிக்கிறோம். அன்றியும் அக்காலத்தில்யுத்தத்தில்தோற்பவர்கள்வென்றவர்களின் அடிமையாய்விடுவார்கள். புறதேசங்களில் வியாபாரிகள் அடிமையாயஆட்களை வாங்கிவந்து ரோமையில்விற்பார்கள். எசமானர் அடிமைகளை எப்படிநடத்தினபோதிலும் கேள்விமுறையில்லை.

மேற்சொன்ன அன்ரோக்கிளஸ்என்ற அடிமைபோல் ஸ்பார்றகஸ் என்ற வேறொரு அடிமை அக்காலத்தில் ரோமையில் சீவித்திருந்தான். அவன் எசமானனிடமிருந்து சுயாதீனமடையவிரும்பி அடிமைகளுக்குத் தலைவனாகி ரோமைச்சேனைகளுடன் இருவருடங்களாய்ப் போராடி ஈற்றில் கிறிஸ்துபிறந்த 71ம் (௵) யுத்தத்திற்கொல்லப்பட்டான். உபத்திரவமடைந்தஒருவன் தன்கஷ்டத்திலிருந்து தன்னைப் பலவந்தமாய் மீட்கக்கருதினால் அவனை "ஸ்பார்ட்டக்ஸ்" கொள்கைக்காரனென்று சொல்வர். அதுவே ஸ்பார்ட்டக்ஸ் கட்சியாரென்று சொல்வதின் கருத்து.

இவர்களைவிட சோஷியாலிஸ்ட் என்ற ஓர்கட்சியாருளர். அவர்களைக்குறித்தும் இவ்விடம்சொல்லல் உசிதம். அவர்களின்கொள்கையும் ரோமையர்காலத்தே யுண்டானது. அக்காலத்தில் ரோமாபுரியிலும் அதைச்சுற்றியும் பிறந்துவளர்ந்தவர்கள் தாமே மேன்மக்களென்று கருதியிருந்தார்கள். அக்காலத்தில் ரோமையருடன் வர்த்தகமாதிய கருமங்களைவிட்டு உறவுகொண்டாடிய மற்றைய இத்தாலியர் "சோஷி" அதாவது கூட்டாளிகள் என்னுங் கருத்தமைந்த இலத்தின்சொல்லா லழைக்கப்பட்டார்கள். அவர்கள் ரோமையின் சுதந்தரத்தையனுபவியாதவர்களாதலால் அச்சுதந்தரத்தைப்பெற ரோமையருக்கு விரோதமாய்க் கிளம்பியும் பொம்பேதியுஸ்சிலோ என்பவனைத் தலைமையாயக்கொண்டு யுத்தஞ்செய்து ரோமையரால் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆயினும் அக்கலாபனைக்கு ஒருமுடிவுசெய்ய ரோமைச் செனட்சங்கந் தீர்மானித்து இத்தாலியசனங்களுக்குப் பற்பல மானியங்களைவிட்டு அவர்களைச் சாமாத்தியமாய்ச் சரிப்படுத்திவிட்டது. அக்காலமுதல் சோஷியாலிஸம் என்னுங்கோட்பாடிருந்தது. பல நூற்றாண்டுகளின்பின் ஐரோப்பாவில் சோஷியாலிஸம் தலைகாட்டத்தொடங்கிற்று. அவர்களின்கொள்கையாதெனில் தேசத்திலுற்பத்தியாகுஞ் சகலபொருட்களும் பொதுவாயிருக்கவேண்டும். தனவந்தர் ஏழையென்ற வித்தியாசம் இருக்கக்கூடாது. உணவுப்பொருட்கள் சகலருக்கும் சமமாய்ப் பங்கிடவேண்டுமென்னும் ஒவ்வாத கோட்பாடுடையராயிருந்தனர்.

ருஷியாவில் முன்பின் இதேகொள்கையுடையதான ஒருகட்சியார் போல்ஷேவிக்குகள் என்று அழைக்கப்படுபவர். ஆனால் அவர்கள் அரசாளரையும் அதிகாரிகளையுங்கொன்றாயினும் தங்கொள்கையைநிறைவேற்றவேண்டுமெனுங் கொள்கையுடையர். அக்கொள்கைப்படியே ருஷிய சக்கிரவர்த்தியையும் அவரது மனைவி மக்களையும் இரக்கமின்றிக் கொன்றவர்கள். இவ்வித குரூரகுணமுடையவர்களையே தமக்கனுகூலமாய்ச் சேர்மனியர் ஊக்கப்படுத்தித் தந்திரமாய்ப் பணமுதலிய உதவிசெய்து போல்ஷிவிக்கு கொள்கையைவிருத்திசெய்துவிட்டார்கள். அதன்பலனையே தற்போது அனுபவிக்கிறார்கள்.

## யாழ்ப்பாணம்.

மார்ச்சீர்—தென்றற்காற்றுத் தலைகாட்டுகிறது. பகலில் வெயிலுமாம். இரவில் புழுக்கந்தொடங்கியிருக்கிறது. பொருட்களெல்லாம் விலையேற்றம்.

சிமேந்துசெய்தல்—சிமேந்துசெய்வதற்கான களிமண் எங்கிருக்கிறதெனத் தெரிவிக்கும்படி அரசாட்சியார் உத்தியோகஸ்தரைக் கேட்டிருந்தனர். எவ்விதகளிமண் உதவுமென அறியாதபோது அவரெப்படிப் பதில்கூறுவர். யாழ்ப்பாணத்தில் எவ்வித களிமண்ணும் அகப்படுமென்பது நமது நம்பிக்கை. அதை வருங்காலந் தெரிவிக்கும். தற்போது கரிசன்கிராஸ்மிஸ்ட்கம்பனியார் காங்கேசன்துறையையடுத்த கட்டுவனில் சிமேந்துசெய்தற்குரிய உயர்தரக் களிமண்ணும் கற்களுமிருப்பதாய்க் கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

யாழ்ப்பாணப் பொலிஸ்கந்தோர்—இவ்விடத்தில் இரண்டாம் ஓவர்க்காயிருந்த மெஸ், ஈ. கதிரவேலு முதலாம்ஓவர்க்காக, அவருடைய இடத்துக்குக் கொழும்புப் பொலிஸ்கந்தோரிலிருக்க மெஸ், ஈ. பொன்னையா என்பவர் வருகிறாராம்.

கைத்தொழிற்பாடசாலைக்குதவி—யாழ்ப்பாணத்திலே தொடங்கி நடக்கவிருக்கும் கைத்தொழிற் பாடசாலையிலே ஒரு மாணவரின் உபகாரச்சம்பளச்செலவை தெல்லிப்பளையின் பெரியகிருப்பராகிய C. S. கந்தையாமுதலியார் தம்பொறுப்பில் ஏற்றுக்கொண்டாராம். சென்றமீ 12உ இக்கோக்கத்துக்காய் வைத்துக்காசர் என்னுமிடத்திலே யாழ்ப்பாணப்பிரபுக்களால் ஓர் பகிரங்ககூட்டம் நடத்தப்பட்டு நாலுமாணவர்களுக்கு உதவிகிடைத்தது. மெஸ்ஸேஷ. A. F. கிளவ், C. S. மணியம், J. P. தர்மலிங்கம், M. V. செல்லையா என்பவரே அவ்வுதவி செய்ய முன்வந்தவர்கள். இவைகளேயன்றி அவ்வேலையிலே மேலும் இரண்டொருமாணவர்க்கு உதவிசெய்ய வாக்களிக்கப்பட்டதாகவுமறிகிறோம். அந்தக்கூட்டத்திலேயே 800 டலருக்குக் கையொப்பங்களும் வாங்கப்பட்டனவாம். தம் தாய்நாட்டை உயர்த்தலில் தாராளஉதவிசெய்யுந் தக்கபிரபுக்களுக்கு நாம் மனமுவந்த வந்தனங்கூறுகிறோம்.

மரணசங்கதி—நமதூரைச் சென்னஸ்தானமாயும் இங்கிய மலாய்நாட்டை உத்தியோகஸ்தானமாயுமுடையவரும் நம் அத்தியந்தநண்பரும் நம் பத்திராபிமானியுமான மெஸ், C. W. அப்புக்குட்டியவர்கள் தம் உத்தியோகஸ்தானத்திலேயே காத்திராப்பிரகாரந் தேகவியோகமான சங்கதிவந்தது. இவர் பருத்தித்துறை உவெஸ்லியன்மிஷன்கல்லூரி ஆசிரியர் மெஸ், C. W. சின்னத்தம்பி உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலை ஆசிரியர் மெஸ், W. சின்னையா இ[illegible] மெஸ், V. செல்லையா தெல்லிப்பளைழப்போதகர் கனம். C. D. வேலுப்பிள்ளையவர்களின் பாரியார் இவர்களின் சகோதரர். நற்குணம் நிதார்த்தம் தண்ணளி முதலிய சுகுணலட்சணமுற்றவர். இவரக்காய்த் துயருறுபவருடனே நாமுமொருவராய்ச்சேர்ந்து துக்கிக்கிறோம்.

நம்மூர்வாலிபங்களார்க்குமாருக்குமோர் அதிஷ்டம்—ஆபிரிக்காவைச்சேர்ந்த யுகண்டா நாட்டுக்குக் கிளார்க்குமார் தேவையென கசற்பத்திரத்திலே யுகண்டா அரசினர்கேள்விப்படி விளம்பரஞ்செய்யப்பட்டது. போகவிரும்புவோர் இந்தமீ 15ந் திகதிக்கிடையில் அல்லது அந்திகதிக்கடுத்தநாட்களில் தம் விண்ணப்பங்களை இராசமாளிகைதார்க்குத் தோருத் கனுப்பும்படி கேட்கப்படுகிறார்கள். தெரிவுசெய்யப்பட்டுச் செல்வோரின் சம்பளம் யுகண்டாவில் 100 ரூபாவோடு தொடங்கும். பயணச்செலவும் யுகண்டா அரசே கொடுக்கும். உத்தியோகத்திலமர்ந்தபின்னர் குடியிருக்க வீடும்இலவசமாய்க் கொடுக்கப்படுமாம். சுகாதாரத்திற்கேற்ற இடமாம். அதிகபணச்செலவுசெய்து கற்றும் தக்கவேலைகிடையாமல் அவதிப்படுவோர்க்கு இது தக்கதருணம். "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்பது ஆன்றோர். அதிஷ்டம் வாசற்படியில்வந்து கூப்பிடுகிறது. துணிவுள்ளவர் துரிதப்படுக்கள்.

தலைவரிப்பணம்—எல்லாப் பொருட்களும் விலையேறிப் பஞ்சத்தட்டுக்கேடுண்டாயிருக்கும் இத்தருணத்தில் சனங்கள் தலைவரிப்பணம் கிராமச்சங்க வரிப்பணமாதியன இறுக்கத் தொல்லைப்படுகிறார்கள். தவறினால் ஒட்டிக்கிரட்டியாய் விடுமே என்று ஏங்குகிறார்கள். இவ்வரி இலங்கைக்கென்றுற்பத்தியான புதுவரியாதலாலும் மதுபானக்குத்தகையால் அபரிமிதமான பணம் வருவதாலும் அரசினர் பணக்கஷ்டந்தீர்ந்தபின் இவ்வரியை நீக்கிவிடும்படி பிரதிநிதிகள் கேட்பார்களானால் நன்மையுண்டாகாதா?

தொடுவாயிராச்சியப்பகுதிப் பணம்—தொடுவாயிராச்சியப்பகுதியிலிருந்து இலங்கைக்கனுப்பப்படும் பணம் சிலகாலமாய்க் குறைவானவிலைக்கே இங்கு மாற்றப்பட்டுவந்தது. இனிமேல் தொடுவாயிராச்சியத்திலிருந்து அனுப்பப்படுகிற 100 டலருக்கு இலங்கையிலே 160 ரூபாய் கொடுக்கப்படுமாம்.

கொள்ளையால் கஷ்டமடைந்தோர்க்குப் பதிலளித்தல்—சென்ற கார்த்திகைமீ 9உ தொடக்கமாகச் சிலநாட்களாய் யாழ்ப்பாணத்திலே பெரியகடை கல்லூர் சுன்னாகம் சாவகச்சேரி என்னுமிடங்களிலே கொள்ளையடித்ததால் பலர் நட்டமடைந்தனர். அப்படிப்பட்டவர்க்கு உதவிபுரிவதற்கு இப்போது ஏசன்றாவர்கள் ஒழுங்குசெய்யச் சித்தமாயிருக்கிறார். நட்டப்பட்டவர்கள் தமது நட்டத்தைப்பற்றிய விபரத்தை ஏசன்றருக்குச் சித்திரைமாதம் 25ந் திகதிக்குமுன் எழுத்தில் தெரிவிக்கவேண்டும். ஏசன்றர் சித்திரைமீ 28உ கச்சேரியிலும் 29உ மல்லாகக் கோட்டுவீட்டிலும் வைகாசிமீ 3உ சாவகச்சேரி வாடிவீட்டிலும் அவரவர் கேள்வியைப்பற்றி விசாரணைநடத்துவாராம்.

மரணசங்கதி—மானிப்பாயைச் சேர்ந்தவரும் கொழும்பிலே பிரபலமுற்றுவிளங்கும் ஓர் வர்த்தககொம்பனிக்குத் தலைவராயிருந்தவருமாகிய மெஸ், எஸ். வயிரமுத்து என்பவர் சென்ற 21உ கொழும்பிலே ஜெனறல் வைத்தியசாலையில் இறந்துபோயினர். இவரதுகுடும்பத்திலே இவரது சிரேஷ்டபுத்திரியாகிய மெஸ், எம். நடராசா என்பவரது மனைவியும் மெஸ், நடேஸ்வரன் என்னும் இவரதுபுத்திரனும் இந்தமாசத்திலேயே சிறிது சிறிது நாட்களுக்கிடையில் இறந்துபோயினர். இவர்க்காயும் இவரது குடும்பத்தார்க்காயுந் துயரப்படும் யாவரோடும் எம்மனுதாபமுமிருக்கிறது.

யானையிறவில் ஓர்புதியஉப்பளம்—உப்பளப்பகுதியைச்சேர்ந்தவர்கள் வரப்போகிற பருவகாலத்தில் உப்பை விளைவிக்கிறதற்காக அரசினர் யானையிறவில் உப்பளம் கட்டும்படியாக பி. டப்ளியு. டிபார்ட்மெண்டுக்கு கட்டளையிட்டனர். அப்படியேயாரம்பமாயிற்று.

நோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். தாப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங்களாவன:— முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணாகி அசைக்க முடியாமற்போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானால் மூத்திரப்பை ரோக மடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.




ஒரு புட்டி விலை, ரூபா. .... 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. .... 10 8 0

இவை, சிகை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆர. டப்ளியு. எச். நல்லூர் துரையவர்களிடத்திலும் கிடைக்கும்.

# இலங்கை.

இலங்கைச் சாதிசங்க சபாநாயகர்—கொழும்பிலேயுள்ள இலங்கைச்சாதிச்சங்க சபாநாயகராக அப்புக்காத்து மெஸ். எச். ஏ. பி. சந்திரசேகரா தெரிந்து நியமிக்கப்பட்டார்.

உத்தியோகபதவியின் உயர்வு—சுப்ரீங்கோட்டுத் துவிபாஷித முதலியாராயிருக்கும் மெஸ. R. C. பிரௌதர் என்பவர் கிளேறிக்கல் முதல்வகுப்புக்குயர்த்தப்பட்டனர்.

வைத்தியருக்கு உதவி—இலங்கையிலே டக்டர்மாராயிருந்து 10 வருடம் ஊழியஞ்செய்தவர்களிலாராவது அதிமேலான வைத்தியபட்டங்கள் பெறுவதற்கு இங்கிலாந்து செல்லவிருப்பார்களானால் அவர்கள் போக்குவரவுச் செலவை அரசாட்சியார் பொறுக்கச் சிலகாலத்தின்முன் தீர்மானித்தனர். வைத்தியபட்டங்கள் பெற்றிருப்பார்தாமும் மேலும் உயர்ந்த பட்டங்கள் பெறப்போக விரும்புவார்களானால் அவர்களுக்கு இச்சகாயஞ்செய்ய இப்போது தீர்மானித்திருக்கிறார்கள்.

இங்கிலாந்துசெல்வோர்—இலங்கை இராசாங்கலிகிதர் கௌரவ மெஸ. R. E. ஸ்டபஸ் அவர்களும் வித்தியாகர்த்தர் டென்ஹாம்துரையவர்களும் லீவுபெற்று சித்திரைமீ 5உ இலங்கையைவிட்டுஇங்கிலாந்துக்குப் புறப்படுகிறார்கள்.

புதிய திஸிலூர்ஜெனறல்—மத்தியமாகாண ஏசன்றாகிய மெஸ. W. L. கின்டேஸியவர்கள் திசிலூர் ஜெனறலாக நியமிக்கப்பட்டுக் கடமைபார்க்கின்றனர். கௌரவ C. S. வேடன்ற் என்பவர் அவரிடமாய் நியமிக்கப்பட்டனர்.

பொன்விருதுமுத்திரை—கேம்பிறிட்சச் சர்வகலாசாலையார் வித்தாண்மைக்காய் வழமையாயளிக்கும் விருதுமுத்திரை இம்முறை இலங்கையாரொருவர்க்குக் கிடைத்தது. இதைப்பெற்றவர் மெஸ். F. S. T. பின்ரோ என்பவர். இவர் யாழ்ப்பாணத்திலே டிஸ்திறிக் நீதிபதியாயிருந்து நீர்கொழும்புக்கு மாற்றப்பட்டவராகிய மெஸ. M. திஷிஷரூ அவர்களது மருகர். இப்போது இவர் இங்கிலாந்திலே நியாயப்பிரமாணங்கற்கின்றனர். வயது 25. பிராஞ்சியாகிய சேன்றூயிஸ்அவர்களைப்பற்றி வர்ணனையான பாவியத்தியதின்பொருட்டே இவர்க்கு இந்தப் பரிசளிக்கப்பட்டது. இலங்கையார்க்குள் இவ்விதகீர்த்தி படைத்தவர் இவர் மாத்திரமேயாம்.

ஓர்கொலை—மாத்தறைக்குச் சமீபத்தில் ஜெயசிங்கோனிஸ் என்பவன் ஒரு ஸ்திரியோடு ஏதோ சில விஷயமாகத் தர்க்கம் பண்ணிக்கொண்டிருந்து திடீரென கோபாவேசமாகி அம்மாதை உலக்கையாலடித்துத் தாக்கினன். அடிவ[illegible]க்கு அடி வெகு உரமாய் விழுந்ததினால் உடனே ஆஸபத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு மறுநாள் இறந்தனள். குற்றவாளி பிடிக்கப்பட்டான்.

தோட்டத்துரையைக் கொல்லமுயன்றவன்—காவலப்பிட்டியில் இம்புல்பிட்டியாவில் ஒருவன்ஞன் மெஸ், ஓ. பேலியன் துரையை நெஞ்சில் கத்தியால்குத்திக்காயப்படுத்தினனென்றவழக்குக் கண்டிச் சுப்பிரீங்கோட்டில் விசாரணையாகிக் குற்றவாளிக்கு 10 வருட கடின சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் சாப்பாட்டிற்குப்பின் நீதிபதி யூரிமாரைப்பார்த்துக் குற்றவாளி குத்தினகாயமானது அபாயகரமானதென்று சாட்சிகள் கூறப்படாததால் அதைப்பற்றித் திரும்ப ஆலோசிக்கவேண்டுமென்று ஆக்ஞாபித்தனர். யூரிமார்யோசித்துப் பலத்தகாயத்தை யுண்டுபண்ண முயன்றனனென்று குற்றஞ்சாட்டினர். ஆதலின் நீதிபதி ஐந்துவருடமே கடுஞ்சிறையெனச் சிட்சைவிதித்தனர்.

அக்கினிக்கிரையான ஒருபாய்க்கப்பல்—கொழும்புத் துறைமுகத்துக்கு அடிக்கடிவந்துகொண்டிருந்த போனவென்டோ என்ற ஒரு டானிஷ்கப்பல் 1348 டன்நிறையுள்ளது. தைமீ 4உ இக்கப்பல் கேப்டவுனைவிட்டு 71 தினங்களுக்குப்பிறகு கொழும்பிலிருந்து 150 மைல்தூரத்தில் வருகையில் தீப்பிடித்தது. மாலுமிகள் நெருப்பணைக்கப் பிரயத்தனங்கள்செய்தும் பயன்படாததினால் சரக்குகளைச் சமுத்திரத்தில் தள்ளினர். கப்பலிலுள்ளோர் அபாயம் சமீபத்திலிருக்கிறதையறிந்து நாலு படகுகளில் இறங்கினர். சிலநிமிஷங்களுக்குப்பின் படார் படாரென்று அதிர்வெடிச்சத்தம்போன்று இருவிசைவெடித்துக் கப்பல்ஆழ்ந்தது. மாலுமிகள் நாலுதினங்களாகக் கடலில் பசி பட்டினியாயிருந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் தேவகிருபையால் பம்பாயிலிருந்து சிங்கப்பூருக்குச் செல்லும் சென்மசார்ட்டின்குவளன்றகப்பல்இவர்களைக்காப்பாற்றிக் கப்பலிலேற்றிக் கொழும்புத்துறைமுகத்தில் அவர்களை இறக்கிவிட்டுச்சென்றது.

ஓர்பிரமாண்ட கடியாரம்—மக்கோனவிலிருக்கும் விறதர் ஊசிப்ஸ்அவர்கள் அங்குள்ள தொழிற்சாலையில் தமக்குள்ள சாஸ்திரோயுத்தியினால்ஒரு பெரியகடியாரத்தைச் செய்துமுடித்தனர். இது இந்நகரில் சில உப்பரிகைகளில் வைக்கப்பட்டிருக்கிற ஐரோப்பாவிலிருந்து வரவழைக்கப்பட்ட இதர பெரிய கடியாரங்களை நிகர்த்தது. இது பம்பலப்பிட்டியிலிருக்கும் செயின் மேரிஸ் ஆலயத்தின் உப்பரிகையில் ஸ்தாபிக்கப்படும். இதுவன்றி நீர்கொழும்பில் செயின் மேரிஸ் ஆலயத்தில்வைக்கப்பட்டிருக்கும் பெரிய கடியாரமும் இவருடைய கைவேலையே.

தீவிபத்து—மருதானையிலிருக்கும் வவாசியா தொழிற்சாலையில் மறுபடியுந் தீப்பிடித்தது. அடுக்கப்பட்டிருந்த தேங்காய்நெய்ப் பீப்பாக்களின்மேல் தேயிலைச்சாக்குகளும் வைக்கப்பட்டிருந்தன. அவைகள் தீப்பற்றி எரியத்தொடங்கின. பெரும்பிரயாசத்துடன் அநேகர்சேர்ந்து அக்கினிபரவாமற் றடுத்தனர்.

நீரிலமிழ்ந்திறத்தல்—களனிவல்லை பாலத்துக்கருகில் குளிக்கச்சென்ற இருசிங்களவர் நீரிலமிழ்ந்திறந்தனர்.

ஓர்திருடன்—சென்ற 10உ கோங்கோங் வங்கில் ஓர் வர்த்தகர் 4500 ரூபாயை ஒரு பையிற்கட்டிவைத்துவிட்டுக் கணக்குப்பார்த்துக்கொண்டிருந்துவிட்டுத் திரும்பிப்பார்க்கப் பை காணப்படவில்லை. அவர் கூக்குரலிடவே அதையெடுத்துக்கொண்டு பெயிவிரோட்டால் ஒருவன்போனதைக்கண்டு பிடிக்கப்பட்டுப் பொலிசில்அடைக்கப்பட்டான். பணம் சொந்தக்காரருக்கு அனுப்பப்பட்டது.

கடலில்மிதந்து திரியுங்கப்பல்.

அவுஸ்திரேலியாவிலிருந்து கொழும்புக்குவந்த பி. அன். ஓ. நாலடா என்ற கப்பலின்தலைவர் இம்மாதம் 20ந்திகதி அந்தராத்திரி 12-30 மணிக்கு நன்றாய் சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருக்கையில் கொக்கோஸ் தீவுகளுக்குச்சமீபத்தில் அக்ஷரேகை 1-8 மதிரிதெற்கு நிர்க்கரேகை 86-34 கிழக்கு இவ்விருரேகைகளும் சந்திக்கும் சமுத்திரபாகத்தில் நார்வேசியன்கப்பலை நிகர்த்த ஒருகப்பல் கடல்மட்டத்தில் மிதந்துசெல்வதைக்கண்டேனென்று தெரிவித்தனர்.

# யுத்த தந்தி.

“சிலோன் றைம்ஸ்” “சுதேசமித்திரன்” “ஜனமித்திரன்” “சர்வவியாபி” பத்திரிகைகளினின் றெடுக்கப்பட்டன.

அமரிக்காவும் யுத்தமும்.

4உ அமரிக்க செனட்சபையில் மெஸ, லாட்ஸ் என்பவர் இனவுரிமைச்சங்கம் நன்காலோசித்தற்குமுதல் செர்மனியுடன் திருத்திகரமான சமாதானம் ஏற்படுத்தவேண்டுமென்னுந் தீர்மானத்தை ஆலோசனைக்குக் கொண்டுவந்தார். இதைப் பிரபுக்கள்சபையார் ஆட்சேபித்தனர், ஆதலால் அத்தீர்மானம் சபைக்குவிடப்பட்டது. அதில் 37 பேர்கள் இதற்கு உடன்பரென்று அவர்கள்சம்மதத்தை மெஸ, வோட்டு வாசித்தார். அத்தொகை சபையங்கத்தவரில் மூன்றில் ஒருபங்குக்கதிகமாகவேயிருந்தது. சமாதான உடன்படிக்கைத்தீர்மானத்தைத் தோல்வியுறச்செய்ய இத்தொகை போதியது. அதைநிறைவேற்ற மூன்றில் இருபங்குப்பேர்களின் சம்மதம் அவசியமானது. ஆதலால் சர்வதேச இனவுரிமைச்சங்கத்தை அமரிக்க ஐக்கியஅரசு நிராகரிக்கிறதென்றே தெரிகிறது. காங்கிரஸ்கூட்டம் பின்வைக்கப்பட்டது செனட்சபை அங்கத்தினர் சிலர் அரசாங்கத்தைத் தப்பற்றிக்கத் தலைப்பட்டிருக்கின்றனரெனத் தெரிவித்தார்.

5உ பிரசாதிபதி வில்சன் பிரான்சுக்குப் புறப்பட்டார். திரளானசனங்கள் ஆசிகூறிப்பயணமனுப்பினர். பொலிஸ்காவல்செய்யப்பட்டிருந்தது. அமரிக்கா சர்வதேச இனவுரிமைச்சங்கத்தை ஆதரிப்பதற்காக அத்தேசத்தின் பலபகுதிகளிலுமிருந்து சாட்சிகிடைத்திருக்கிறதென்று மெஸ. மிட்டோபாலிடன் சொன்னார்.

நியுயோர்க்கில் கப்பல்வேலையாட்கள் தாம் நாளொன்றில் 8 மணிநேரந்தான் வேலைசெய்வோமென்றும் சம்பளம் 100க்கு 30 வீதம் அதிகப்படுத்தவேண்டுமென்றுஞ்சொல்லி வேலைநிறுத்தஞ்செய்தனர். கப்பல் ஏற்றுமதி இறக்குமதிவேலைகளெல்லாம் நடைபெறவில்லை. பிரசாதிபதி ஐரோப்பாவுக்குப் புறப்படுமுன் சனக்கள்நிறைந்த ஓரிடத்தில் பேசியபோது சமாதானம் ஏற்படுமுன் நான் திரும்பிவருவதில்லை. உலகின் சேமத்தை உத்தேசித்துச் சமாதானம் சீக்கிரம் ஏற்படவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். அமரிக்க பிரசைகளிற் பெரும்பாலார் சர்வதேச சங்கத்தை ஆதரிக்கின்றனர். பரிசிற்கூடியிருக்கும் பற்பல தேசப் பிரதிநிதிகளும் அதேநோக்கமுடையாராயிருக்கின்றனர். சர்வதேசசங்கத்தாரால் எக்கருமும் தீர்மானிக்கப்படுமென ஏற்பட்டால் இதுவரையில் நடந்துவந்த சூழ்ச்சிகள் தலைகாட்டமுடியாது. செர்மனி செர்வியாவுடன் போர்தொடங்குமுன் ஒருவராமாவது யோசிக்க இடங்கொடுக்கவில்லை. பிரித்தானியா பிரான்சுடனும் ருஷியாவுடனும் சேருமென்ற எண்ணமிருந்தால் செர்மனி இச்செய்கையிற் றலையிட்டிராது. அவ்விதக்கிரமத்தப்பாய் எத்தேசமும் நடக்கின் சர்வதேசசங்கந் தடுக்குமென்று எச்சரிக்கைசெய்வதற்காகவே இச்சங்கம் உற்பத்தியாக்க ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. பொதுச்சன உணர்ச்சியை தலைவர் கவனிக்கவில்லை. எத்தேசமும் ஆள்பவருக்குப் பெருமையைக்கொடுக்கமாத்திரம் ஏற்படவில்லை. பிரசைகள் சந்தோஷமாய் வாழும்படி செய்யவே தேசங்கள் ஏற்பட்டிருக்கிறது. அன்னியதேசத்திற்குப் போராட நாம் அனுப்பியிருக்குஞ் சேனைகளின் உணர்ச்சி எவ்விதமிருக்கிறதென்பதை நீங்கள் கவனிக்கவில்லை. உலகில் எப்பக்கத்தின மனிதரின் நன்மைகளுக்குப் பங்கமுண்டாயினும்அமரிக்க ஐக்கியதேசம் உதவிசெய்யப்போகத் தயாராயிருக்கிறதென்பதை ஐரோப்பாவுக்கு அறிவிக்கவே தங்களை அனுப்பப்பட்டிருக்கிறதென்ற எண்ணத்துடன் சென்றிருக்கிறார்கள். அவர்களின் மேலான எண்ணத்தையறிந்தபின் அவரது மேலான எண்ணத்திற்குப் பங்கம்வரும்படி நான் பின்வாங்குவேனென்று நீங்கள் நினைக்கிறீர்களா? இவ்விதமுயற்சி பலிதமாகும்வரையில் நான் திரும்பிவருகிறதில்லை. சமாதானசங்கம் ஏற்படாவிடில் எவ்விதஉடன்படிக்கை ஏற்படினும் பிரயோசனமாயிராதென்று அச்சங்கப் பிரதிநிதிகளாய் வந்திருப்பவர்கள் யாவரும் அபிப்பிராயப்படுகிறார்கள். அதிற் குறைகூறச் சுயநலத்தைக்கருதியவர்கள் அமரிக்காவிலேயே தோன்றியிருப்பது எனக்கு வியப்பாயிருக்கிறது. உலகத்திற்கு உபகாரஞ்செய்வது நமக்கு அபாயமாய் முடியுமென்று யோசனையின்றிச் சொல்லுகிறார்கள். உலகத்திற்கு உபகாரஞ்செய்யாமலிருப்பது நமக்கே விபரீதமாய் முடியும், அந்தச்செய்யாவிடின் நமது பிரக்கியாதியும் அற்றுப்போம், ஆதலால் இவ்வுடன்படிக்கைக்கு அமரிக்கா சம்மதிக்குமென்பதில் சந்தேகமில்லை. நாம் சொல்வதைச் சத்துருக்கள் வெளிவேஷமென்று கருதியிருந்தனர். நமதுசேனைகள் அங்குசென்று தமது உணர்ச்சியைக் காட்டினவுடனே அவர்கள்பிரமிப்படைந்து நாம்சொன்னது உண்மையென்று கண்டுகொண்டார்கள். மனிதவர்க்க நண்பரென்றுஞ்சொல்ல முற்பட்டார்கள். அமரிக்கர் பொதுவான ஓர்கொள்கையை நிலைநிறுத்தத் தம்முயிரையுங்கொடுக்கத் தயாராயிருப்பர். சர்வதேசசங்க உடன்படிக்கு விரோதமாய் ஒருதேசம் மற்றத்தேசங்களுடன் உடன்படிக்கை செய்யக்கூடாதென்று உடன்படிக்கையில் ஓர்விதியிருக்கிறது. அதை எல்லாத்தேசத்தாரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். எல்லாத்தேசங்களுக்கும் அன்னியோன்னியமிருக்கவேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது, எத்தேசமாவது தவறுசெய்தால் மற்றத்தேசங்கள் அதற்கு விரோதமாக ஒன்றுசேர்ந்துகொள்ளவேண்டும். யான் இங்கு திரும்பிவந்தபின் பரிசில் பல சிக்கலான விஷயங்கள் முடிவுசெய்யப்பட்டிருப்பது சந்தோஷம். அங்கே பிரதிநிதிகள் உற்சாகத்துடன் மனச்சோர்வின்றி வேலைசெய்துவருகின்றனர். நாம் மனிதவர்க்கத்தாருள் நீதியை நிலைபெறச்செய்தோமென்னும் பெருமையை நாம் பாராட்டுங்காலஞ் சமீபித்திருக்கிறதென்று தாம் நம்புவதாயச்சொன்னார்.

பிரித்தானியா.

13உ காமன்ஸ் மகாசபையில் சர்சேர்ச்சிலென்பவர் விமானப்படைச்செலவு விஷயமாக சட்டத்தை ஆலோசனைக்குக் கொண்டுவந்தார். அதன் மதிப்புத்தொகை 66 லட்சம். வேலைகாரர்களின் சம்பளத்தொகையின் மதிப்பு 5 லட்சமாகும். அச்சட்டத்தைப் பிரேரேபித்துப் பேசியதாவது— “யுத்தநிறுத்த காலத்தில் நம்மிடம் இருநூறு விமானப்படைகளிருந்தன. யுத்தத்திற்குமுன் நம்மிடம் 6 விமானப்படைகளேயிருந்தன. மாதமொன்றுக்கு நாலாயிரம் விமானங்களைசெயபுஞ்சக்தியுள்ளவர்களாகவிருந்தோமென்றும்பிரித்தானியதேசத்தைத்தாக்கவந்த ஆகாயப்படைசம்பந்தப்பட்ட டமட்டில்அதியுன்னத ஸ்திதிக்குக்கொண்டுவந்த வழிகாட்டிகளையும் பாதுகாவல்செய்துகொண்டிருந்தவர்களையும் பற்றியும்புகழ்ந்துபேசினார். யுத்தத்தில் ஆகாயப்படைகள்செய்திருக்கும் வேலைகளைப்பற்றிய விவரம் கூடியசீக்கிரம் பிரசுரிக்கப்படும். வெகு ஆச்சரியத்திற்குரிய விஷயங்களெல்லாம் வெளிவரும். யுத்தத்தில் ஏறக்குறைய 8000 சத்துருவிமானங்கள் நாசப்படுத்தப்பட்டன. பிரித்தானியருக்கு இரண்டாயிரத்து எண்ணூறு விமானங்கள் சேதமாயின. ஆபிரிக்காவிலுள்ள கெய்ரோநகரிலிருந்து இந்தியாவுக்குத் தபால்கள் கொண்டுபோவதற்குச் செய்திருக்கும் உபாயம் சாலச்சிறந்தது. அநேக வருஷங்களாய்ப் பிரயாசைப்பட்டபின்பு இப்பொழுது நம்மிடம் கம்பியில்லா டெலிபோன் இருந்துவருகிறதென்றும் அதனால் சமாச்சாரங்களை மற்றவிடங்களுக்கு அனுப்புவதுமட்டுமல்லாமல் அவைகளுக்குப் பதில்களையும் கிரகிக்கமுடிகிறதென்றுங் குறிப்பிட்டார். நாம் தரையிலிருந்துகொண்டு கம்பியில்லாத்தந்தி மூலமாக விமானங்களை இன்னின்னமார்க்கமாகச் செல்லவேண்டுமென நடத்துவிக்கச் சக்தியுள்ளவர்களாகவிருக்கின்றோமென அறிவித்தார். கடல்விமானம் 13 ஆயிரம்றாத்தல் பதார்த்தத்தைச் சுமந்துகொண்டு மணிக்கு 100 மைல்வீதம் செல்லுகிறதென்றுந் தெரிவித்தார். 20 ஆயிரம் றாத்தல் பாரமுள்ள சாமான்களைத் தூக்கிச்செல்ல சக்தியுள்ள விமானங் கட்டப்படுகிறதெனவுங்கூறினார் எல்லாவற்றையும்விட மிகப்பெரிதான விமானமொன்று செய்யவேண்டுமென யோசிக்கப்பட்டிருக்கிறதாகவும் அதில் [illegible] கருதக்கூடாத அவ்வளவுவேகமாகச் செல்லமுடியுமென்றும் அப்பேர்ப்பட்ட ஒன்று செய்யப்படுகிறதென்று சொன்னார். அவர் கடைசியாக நாம விமான முற்போக்கில் நமது நிலைமையைக் காப்பாற்றிக்கொள்ளலாமெனத்தான் மனப்பூர்வமாய் நம்பியிருப்பதாகவுந் தெரிவித்தார்

20உ காமன்ஸ் மகாசபையில் மெஸ், போனர்லா அவர்கள் நிலக்கரி விசாரணைக் கமிஷனர்களின் மூன்று அறிக்கைகளையும்பற்றிப் பேசினார்.

முதலாவதாக சுரங்க வேலையாட்களும் தொழிற்பிரதிநிதிகளும் ஒப்பமிட்டு அனுப்பியஅறிக்கையில் சுரங்கவேலையாட்களின் குறைகளெல்லாம் நீக்கப்படவேண்டியதுதானெனச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. சுரங்கங்களின்மீது அரசாங்கத்தார் அதிகாரம் வகிக்கவேண்டு மென்பதும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாகநிலக்கரிச்சுரங்கச்சொந்தக்காரர்கள்

ஒப்பமிட்டிருக்கும் அறிக்கையில் நாளொன்றுக்கு 18 பென்ஸ் அதிகசம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் 8 மணிநேரம் வேலையென்பது 7 மணியெனக் குறைக்கப்பட வேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

மூன்றுவதாக ஜஸ்டிஸ் ஷாங்கி அவர்களாலும் நிலக்கரிவேலையில் நேராகச்சம்பந்தப்படாத முதலாளிமார்களும் ஒப்பமிட்ட அறிக்கையில் உடனே வேலையாட்களின் சம்பளங்கள் இரண்டு ஷிலின் மூன் பணமாகக் கொடுக்கப்படவேண்டும். அதாவது அவர்கள்கேட்பதில் மூன்றில் இருபங்கு கொடுக்கப்படவேண்டுமென்றும் ஆடி மீ மத்தியகாலத்திலிருந்து வேலைசெய்யவேண்டியநேரம் ஏழு மணியாகக் குறைக்கப்பட வேண்டுமென்றும் அங்ஙனம்செயவது 1920 வருஷமுடிவில் அக்கைத்தொழின் நிலையைப் பொறுத்திருக்கிறதென்றும் இரண்டு வருஷங்களுக்குப்பின்னர். வேலைசெய்யும்நேரம் 6 மணியெனக் குறைக்கப்படவேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

சம்பளம் அதிகப்படுத்தியிருப்பதினால் நிலக்கரி மடுவங்களிலுள்ள வேலையாட்களுக்கு மூன்றுகோடியே முப்பதுலட்சம்பவுண் அதிகமாகக்கொடுக்கவேண்டியிருக்கிறதென்றும் இவ்விதஞ்செய்தல் அனேகமாக நிலக்கரி வாங்குவோர்களிடம் விலை அதிகப்படுத்தாமலும் இருக்க வேண்டுமென்றும் மேலும் தற்போது இத்தொழில் முதலாளியாகவும் வேலையாளாகவும் இருப்பது குறைக்கப்படுகிறதென்றும் இவைகளை அரசாங்கத்தாராவது ஆதீனத்திற் குட்படுத்தவேண்டுமென்றும் 'அல்லது தேசசனங்கள் ஒன்றுசேர்ந்து இவைகளைக் கிரயத்துக்கு வாங்கவேண்டுமென்றும் அல்லது அவைகள்சேர்ந்து அதிகாரம் வகிக்க வேண்டுமென்றும் மெஸ். ஜஸ்டிஸ் ஷாங்கி எடுத்துக்காட்டினர். ஆதலால் சுரங்கவேலையாட்கள் இனிமேல் நிலக்கரிச்சுரங்கம் சம்பந்தப்பட்டது வரை தங்களது அபிப்பிராயங்களைத் தெரிவித்ததின்படி பொழுக உரிமையடைய வேண்டுமென்றும் சிலபகுதிகளில் வீட்டுவசதிகள் செய்திருப்பது நமது நாகரீகத்தைக் குறைகூறுவதற்கிடமாயிருக்கிறதென்றும் 1 டன்கரிக்கு 1பென்சுவீதம் அறவிட்டு வீட்டு வசதிகள் செய்துகொடுப்பதில் செலவிடலாமென்றும் அவ்வறிக்கை சிபார்சு செய்கின்றது. இதனால் வருஷமொன்றுக்கு 10 லட்சம்பவுண் கிடைக்கும்.

மெஸ். ஜஸ்டிஸ் ஷாங்கியவர்களின் அறிக்கையை அரசாங்கத்தார் ஒப்புக் கொண்டிருக்கின்றனர், சுரங்கங்களின்மீது அரசாங்கத்தார் அதிகாரம் வகிக்கும்விஷயமாக வைகாசி மீ 20வ க்குள் அறிக்கையொன்று வெளியிடுவதாக ஒப்புக்கொண்டிருப்பதோடு விசாரணைக்கமிஷனர்கள், இன்னும்தங்களது விசாரணைகளை நடத்திக்கொண்டு சீர்திருத்தங்கள்செய்யும் தங்களது அறிக்கைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்க வேண்டுமென்ற ஏற்பாட்டையும் அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இதனால் நிலக்கரியின்உபயோகத்தை இன்னும் இரண்டுவருஷங்கள் வரையட்டுப்படுத்தவேண்டியிருக்கிறதென்றும்இவ்வேற்பாட்டால் கோடியே 50 லட்சம்பவுண்செலவுறப்படுமென்றும் வியாபாரிகளின் லாபத்தை டன் ஒன்றுக்குப் 14 பென்ஸ் எனத் திட்டப்படுத்துவதினால் 3 கோடிபவுண் கிடைக்குமென்றும்மீதியைகுறைவுக்காகவொருகோடியே 50லட்சம்பவுணும் வேறு அனேகவிஷயங்களில் சிக்கனமாயிருந்து சம்பாதிக்க வேண்டுமென்றும் மெஸ். பொனர்லா எடுத்துக்காட்டினர். அரசாங்கத்தார் வேலை நிறுத்தமொன்றும் ஏற்படாதிருப்பதற்காக தங்களால் கூடியவரைபிரயாசப்பட்டார்கள "இந்தநிலைமையைப் பணம் செலவழித்து செவிக்க முடியுமானால் அரசாங்கத்தார் தங்களிடமுள்ள பணமுழுமையும் யாதொரு யோசனையுமின்றிச் செலவுசெய்வார்கள். ஏனெனில் இதன்முடிவு தேசத்தில் அரசாங்கமே யில்லாமற் செய்துவிடும்" என்றுமெஸ்பொனர்லா கூறிமுடித்தார்.

சமாதான உடன்படிக்கை நிபந்தனைகள்.

7வ சமாதானக்கூட்டத்தில் நடந்தவிவாதத்தில் மெஸ். லாயிட்ஜியார்சவர்கள் பிடிக்கப்பட்ட செர்மன் கப்பல்களில் லெவத்தை இங்கிலாந்து எடுத்துக்கொண்டால் இங்கிலாந்து அமெரிக்காவுடன் கடற்படையில போட்டி போடும்படி செய்விக்குமென்ற அபிப்பிராயத்திற்கிணங்கினுர். பெரிய பிரித்தானியாவும் அமெரிக்காவும் இவ்விஷயத்தில் ஒன்றுபட்டனர். தங்களது அபிப்பிராயங்களும் பிரான்சு இத்தாலி முதலான தேசங்களின் அபிப்பிராயங்களும் ஒன்றுபடும்பொருட்டு அத்தேசங்களுக்கு கப்பல்களையழிப்பதைவிட கொடுத்துவிடுவதெனவுந் தீர்மானித்துவிட்டனர்.

11வ தென்னுபிரிக்கா ஜேயக்கட்சிப் பிரதிநிதிகள் ஐரோப்பாவிற்கு நியூயார்க்கு மார்க்கமாக ஜவாவிலிருந்து டச்சுக்காரர்களின் சரக்கேற்றிச் செல்லும் "பாலின்" என்னும் கப்பலிற் செலலுவார்கள.

செர்மனி.

15வ செர்மனியர்கள் தங்களிடமுள்ள வியாபாரக்கப்பல்களை ஐக்கிய கட்சியார்களிடமொப்புவிக்கச் சம்மதித்திருக்கின்றனர்.

